நாள் 04.12.2023.

அசல் வழக்கு எண்109/2019

வா சா 1 டேவிட் செல்வராஜ், த/பெ சுப்பையா நாடார்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும் நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல்செய்திருக்கிறேன் என்றால், நான் வழக்கு சொத்தை அனுபவிப்பதாக வழக்கு தாக்கல்செய்திருக்கிறேன் அது என்னுடைய தாத்தா மற்றும் அப்பாவின் இடமாகும். சுப்பையா நாடார் எனது தகப்பனார் என்றால் சரிதான். சுப்பையா நாடார் யாருக்கு ஒத்தி ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்று தெரியுமா என்றால், அய்யாத்துரைக்கு எழுதிக்கொடுத்தார்கள். அது எந்த வருடம் என்றால், வருடம் எனக்கு தெரியவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமான வா சா ஆ 1 ஆவணத்தில் சொத்திற்கு எல்கை விவரம் போடப்பட்டுள்ளதா என்றால் போடவில்லை. எனது பிராதிலும் நான்குமால் எல்கை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது சொத்தின் எல்கை விவரம் என் ன என்றால், எனக்கு தெரியாது. ஜேக்கப்பின் இடம் என்னுடைய இடத்தில் இருந்து எவ்வளவு இடம் தள்ளி இருக்கிறது என்றால், தொட்டு அடுத்து இருக்கிறது. என்னுடைய இடத்திற்கு எந்த பக்கம் பிரதிவாதி இடம் இருக்கிறது என்றால், மேற்கு பக்கம் இருக்கிறது. பிரதிவாதி யாரிடமிருந்து கிரையம் வாங்கியிருக்கிறார் என்று தெரியுமா என்றால், அது எங்களுடைய சொத்து ஆகும். அவருக்கு சொத்தே கிடையாது. அதை நாங்கள்தான் பயிர் செய்து வந்தோம். எங்களுக்கு எத்தனை

ஏக்கர் இடம் பாத்தியம் என்று சொன்னால், மொத்தம் 6 ஏக்கர் பாத்தியம் ஆகும். அந்த 6 ஏக்கருக்கும் வழக்கு போட்டிருககிறேனா என்றால் ஆமாம். அந்த 6 ஏக்கரையும் தாண்டி வேறு எந்த சொத்திலும் எங்களுக்கு அனுபவம் இல்லை என்று சொன்னால் சரிதான். சுப்பையா நாடார் யாரிடம் இருந்து சொத்தை கிரையம் வாங்கினார் என்றால், அது பூர்வீக சொத்து ஆகும். 1910 ல் இருந்தே அவர்கள்தான் அனுபவிக்கிறார்கள் அதற்கான ஆவணம் என் கைவசம் இருக்கிறதா என்றால், இருக்கிறது. வா சா ஆ 2 ஆவணத்தின் அசல் ஆவணம் என் கைவசம் உள்ளதா என்றால், உள்ளது. அதனை தாக்ல்ல செய்ய தயாராக இருக்கிறேனா என்றால், தயாராக இருக்கிறேன். சொத்து எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்தான் எனக்கு தெரியும். வழக்கு சர்வே எண்ணில் 20 ஆவணங்களுக்கு மேல் பதிவாகியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், கிடையாது. வழக்கு போட்ட பிறகுதான் ஜேக்கப் மட்டும்தான் பதிவு செய்திருக்கிறார். 1910 முதல் என்ன என்ன ஆவணங்கள் என் கைவசம் உள்ளது என்றால், என்ன என்ன ஆவணங்கள் தேவையோ அத்ததனையும் என் கைவசம் இருக்கிறது. அதனை தாக்கல்செய்ய தயாராக இருக்கிறேனா என்றால், தயாராக உள்ளேன். எதற்காக வா சா ஆ 3 தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், ஒத்தியை மீட்டதற்கான தாக்கல்செய்திருக்கிறேன். யார் யாரிடம் இருந்து மீட்டார்கள் என்றால், எனது அப்பா மீட்டிருக்கிறாக்ள். ஜெனட் மெர்சி யார் என்றால், எனது மகள் ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் பிராதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது பிராது பத்தி 4 ல் 06.08.2019 அன்று நான் வெளியூரில் இருந்த நிலையில் தபசில் சொத்தில்

எனது மனைவி மற்றும் மக்கள் மேற்பார்வையில் கம்பி வேலி போட்டுள்ளனர் அப்போது மாலை 3.30 மணியளவில் அங்கு வந்த பிரதிவாதியும் அவருடன் வந்த ஆட்களும் எனது சொத்துக்களில் அத்துமீறி நுழைந்துள்ளனர் என்று நான் சொல்லியுள்ளேன் என்ாறல் சரிதான். எனது அப்பாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால், 5 பெண்களும் நா்னும் வாரிசுகள். 5 பெண்களும் உள்ளூரில் இருக்கிறார்களா என்றால் உள்ளூரில் இல்லை சென்னையில் வசிக்கிறாக்ள் சொ்த்தை பொறுத்து எந்த ஆவணமும் எழுதி தந்துள்ளார்களா என்றால் இல்லை. பாக ஆவணம் எழுதி தந்திருக்கிறார்களா என்றால் இல்லை. சொத்தை நான்தான் பராமரித்து வருகிறேன். ஜேக்கப் சொத்தில் உரிமை உள்ளதாக சொல்லுகிறாரா என்றால் ஆமாம். அது அவருடைய இடம் என்று அவர் சொல்லுகிறார். அவருக்கு உரிமை இருந்தால் ஆவணத்தை கொண்டு வரச்சொல்லி நான் கேட்டேனா என்றால், திசையன்விளை காவல்நிலையம் வரை சென்று ஆவணங்கள் தாக்கல் செய்ய சொல்லி கேட்டதற்கு எந்த ஆவணமும் அவர் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் பட்டா ஜேக்கப் மகன் கின்சிலி ரூபன் மற்றும், ஜேக்கப் மகன் செல்வகுமார் பெயரில் அவர்களுடைய சொத்திற்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதுக்கு பிரதிவாதி என்ன பதில் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க கு வி தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.